End Time Warriors

# பரலோக வாசல்

A monthly prayer bulletin for YOUTH & TEENS

Battle 01 - Field 10 - March 2023



# முதல் வரிகள்...

**கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.**

இந்த வருடத்தின் மூன்றாம் மாதத்திற்குள்ளாக, நம்மை நுழையச் செய்த தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தின் படி, (ஏசாயா 27:6 "யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்") அநேக புதிய எல்லைக்குள்ளாக நுழையவும், அங்குள்ள வாலிப ஆத்துமாக்களை கர்த்தருக்காய் எழுப்பவும், கர்த்தர் கிருபை செய்தார். குறிப்பாக, இயேசுவை அறிந்திராத அநேக வாலிபர்கள், இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும், பரிசுத்த ஆவியானவராலே நிரப்பப்பட்டவர்களாய், கர்த்தர் தங்களுக்கு தந்தருளின கிருபையின் படியே வெவ்வேறு பாஷைகளை பேச ஆரம்பித்ததையும் கண்டு நாங்கள் தேவனை மனதார துதித்தோம். நீங்கள் ஏறெடுக்கிற ஒவ்வொரு ஜெபத்திற்கு பின்பதாக, கர்த்தர் அநேக வாலிபர்களை எழுப்பி கொண்டிருக்கிறார். தொடர்ந்து உங்கள் ஜெபங்களில் எங்களை தாங்க மறக்காதீர்கள்.

மேலும், அநேக நாட்களின் பிரயாசமாய், இந்த மாதத்தின் **2ஆம் ஞாயிறு சென்னை** பட்டணத்தில், **மாதந்திர வாலிபர் ஐக்கிய கூடுகையை** ஒழுங்கு செய்திருக்கிறோம். அதே போல, இந்த மாதத்தின் **3ஆம் ஞாயிறு கோயம்புத்தூர்** பட்டணத்தில் **மாதந்திர வாலிபர் ஐக்கிய கூடுகையை** புதிதாக துவங்க இருக்கிறோம். ஆகவே, இந்த பட்டணத்தில் நீங்கள் இருப்பீர்களென்றால், எங்களோடு கூட நீங்கள் இணைந்து கொள்ளலாம். மேலும், உங்கள் நண்பர்களுக்கும், இந்த கூடுகையை குறித்து அறிமுகம் செய்யலாம். நாம் இணைந்து, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த அது ஏதுவாக இருக்கும். இன்னும், அநேக மாவட்டங்கள், மற்றும் மாநிலங்களுக்காக இருக்கிற வாலிபர்களை கர்த்தரண்டை நடத்தவும், அவர்களை தேவனுக்கென்று ஓர் சேனையாய் எழுப்பவும், ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். கர்த்தருடைய வருகை சமீபமாயிருப்பதினால், தீவிரமாய் அவருடைய சித்தத்தை செய்து முடிக்க,உங்கள் ஜெபங்களில் எங்களை அதிகமாக நினைத்துக் கொள்ளுங்கள்.

**தேவ கிருபை உங்களோடிருப்பதாக...**

END TIME WARRIORS

PRAY & WAR

**யுத்த களத்தில் உங்களோடு,**

R. **சாலமோன்.**




கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நாள் முதல், நம்முடைய ஆவிக்குரிய ஓட்டமானது துவங்க ஆரம்பிக்கிறது. அவருடைய சித்தத்தை செய்வதில் ஆரம்பித்து, அவருடைய அடிச்சுவடிகளை பின்பற்றுகிறவரைக்கும், இதில் பயனிக்கிற ஒவ்வொருவரும், தங்களுடைய பாதையில் ஓர் போராட்டத்தை எதிர்கொள்கின்றனர். எபே.6:12-ல் சொல்லுகிறபடி “ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு”, இது கர்த்தரை கிட்டிசேர நினைக்கும் ஒவ்வொருவருக்குமான போராட்டம். மேலும், இந்த போராட்டம் கர்த்தருக்கும், உங்களுக்கும் இடையேயுள்ள உறவை துண்டிக்கவும், கர்த்தரண்டை நீங்கள் கிட்டிச்சேர முடியாதபடி, அனுதினமும் உங்களைக் கரைபடுத்த நினைக்கும் பிசாசினுடைய தந்திரமாய் இருக்கிறது.

யோபு 29:3-ல் யோபு அழகாய் தன்னுடைய அனுபவத்தை இவ்வாறு எழுதுகிறார், “அப்பொழுது அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன்”. அநேக நேரங்களில் இருளை நாம் கடக்க முடியாததற்கு அல்லது கர்த்தரை கிட்டி சேர முடியாததற்கு காரணம், தீபமாகிய அவருடைய வார்த்தைகள், நம்முடைய இருதயத்தில் இல்லாமலிருப்பதே. யோபு எழுதும் போது, என்னுடைய வாழ்க்கையில் இருள் இல்லை என்று எழுதவில்லை, மாறாக அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன் என்று எழுதுகிறார். இன்று, அநேகர், தனக்கு முன் இருக்கிற இருளைப் பார்த்து பயப்படுகிறார்கள், அல்லது சோர்ந்து போகிறார்கள். தனக்கு மட்டும் ஏன் இந்த பாதை என்று புலம்ப ஆரம்பிக்கிறார்கள். 2தீமோ.3:12-ல் இவ்வாறு எழுதப்படுகிறது, “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்”. கர்த்தரண்டை நெருங்க நினைக்கிற உன்னுடைய பாதைகள், ஒருவேளை கடினமான பாதைகளாக இருக்கலாம், ஆனால், அந்த பாதையில் உன்னை நடத்தவும், வழுவாமல் உன்னை பாதுகாக்கவும் கர்த்தர் உண்டு என்பதை மறந்து போகாதே. அவருடைய வார்த்தையில், ஒவ்வொருநாளும் ஸ்திரப்படு. ஏனென்றால், யோபுவின் பாதைகள், கடினமான பாதைகளாயிருந்தாலும், யோபுவை கர்த்தர் கைவிடவில்லை. பழைய யோபுவின் அத்தியாயத்தை விட, இந்த பாடுகளுக்கு பிறகான யோபுவின் அத்தியாயம் ஆச்சரியமாயிருந்தது. இயேசுவை கிட்டி சேர நீ எடுக்கும் முயற்சியில், நீ சந்திக்கும் சவால்களை நினைத்து சோர்ந்து போகாதே. இந்த போராட்டங்கள், உன்னை அவர் பக்கமாய் கிட்டி சேர வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து போகாதே.

ஆதி.37:28-ல் ‘யோசேப்பின் சகோதரர்கள் அவரை குழியில் போட்டு, அங்கு வந்த இஸ்மவேலர்கள் கையில் இருபதுவெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள்’. யோசேப்பு எகிப்திற்கு கொண்டு போகப்படுகிறார். ஆதி.39:3-ல் யோசேப்பு கர்த்தரோடே கிட்டி சேர்ந்திருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஆனாலும், இந்த உறவை எப்படியாவது துண்டிக்கவும், யோசேப்பின் மீது கர்த்தர் வைத்திருந்த சித்தத்தை உடைத்தெரியவும், பிசாசு சில தந்திரமான திட்டங்களை செயல்படுத்த ஆரம்பிக்கிறான். முதலாவது, இச்சை என்ற பாவத்தில், யோசேப்பை விழச்செய்ய முயலுகிறான். வேதத்தில் இதை குறித்து சொல்லும் போது, ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல, அநேக நாட்களாக யோசேப்பு இந்த போராட்டத்தை எதிர்கொள்ளுகிறார். ஆனால், கர்த்தரை கிட்டி சேர்ந்திருந்த இந்த யோசேப்பை, அந்த போராட்டங்கள் அசைத்து கூட பார்க்க முடியவில்லை. மாறாக, செய்யாத குற்றத்திற்கு சிறை செல்லுகிறார். வேதம் சொல்லுகிறது, ‘சிறைச்சாலையிலும் கர்த்தர் யோசேப்போடே இருந்தார்’. கர்த்தரை கிட்டி சேர நினைக்கிற ஒரு மனிதன் போகிற பாதைகள் ஒருவேளை இருளாய் இருக்கலாம் அல்லது, அக்கினி நிறைந்த பள்ளத்தாக்காய் இருக்கலாம், ஆனால், அந்த பாதைகளிலெல்லாம் கர்த்தர் அவனோடு கூட இருப்பார் என்பது, வேதம் நமக்கு தருகிற நம்பிக்கை. ஆகையால்,ஒவ்வொருநாளும் கர்த்தரை கிட்டி சேர மறக்காதே, உன்னை குறித்த அவருடைய சித்தத்தை செய்து முடிக்க தவறாதே.

**அன்பின் பிதாவே, உம்மை கிட்டி சேர முடியாதபடி, என்னை தடை செய்கிற, பிசாசினுடைய ஒவ்வொரு தந்திரங்களையும், நான் மேற்கொண்டு, உம்மை நெருங்கவும், உம் சித்தம் செய்து முடிக்கவும், எனக்கு கிருபை செய்தருளும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென்.**

# ஜெபியுங்கள்

## 1ம் வார

### ஜெபக்குறிப்புகள்...



இரட்சிக்கப்பட்டிருக்கிற வாலிபர்கள் எல்லாருக்குள்ளும் கர்த்தர் இந்த நாட்களில் ஜெப ஆவியை ஊற்றும்படியாய் ஜெபிப்போம். அநேக வாலிபர்கள் குழுக்களாய் கூடி ஜெபிக்கிற வாஞ்சையை கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும்படியாய் ஜெபிப்போம்.



குற்றமில்லாத இரத்தம் இந்த நிலத்திலே சிந்தப்படுகிறதின் நிமித்தம் தேவ கோபத்திற்கு நம் தேசம் ஆளாகாதபடிக்கு தேசத்தின் இத்தகைய பாவத்தை அறிக்கை செய்து ஜெபிப்போம்.



அநேக பன்னாட்டு நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் அநேகர் வேலை இழந்துள்ளனர். அவர்களெல்லாரும் விரைவில் பணியமர்த்தப்பட ஜெபிப்போம்.

தேசம் சுவிசேஷ எழுப்புதல் அடைந்து, கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்

## 2ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

எழுப்புதலின் வாசனையும், வாஞ்சையும் விசுவாசிகளின் உள்ளங்களிலும், தேசத்தின் எல்லைகளிலும் பெருகும்படி ஜெபிப்போம்



தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அரசு அமல்படுத்தும்படியாய் ஜெபிப்போம்.

நம் தேசத்தின் எல்லைகளில் பாதுகாப்பையும், அண்டை நாடுகளுடன் சமாதானத்தையும் கர்த்தர் அருளும்படியாய் ஜெபிப்போம்.

வாலிபர்கள் அநேகர் சரியான வேலைவாய்ப்பின்மையால், தவறான பாதையில் பணம் சம்பாதிக்க துணிக்கிறார்கள். இந்த மனநிலை மாறவும், ஏற்ற வேலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

## 3ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

வர இருக்கிற மாபெரும் எழுப்புதலுக்காய் தேசமும், சபையும், விசுவாசிகளும் ஆயத்தப்படுத்தப்படவும், எழுப்புதலில் நம் தேச வாலிபர்களின் பங்கு வெகுவாய் இருக்கவும் ஜெபிப்போம்.

போதை வஸ்துக்களுக்கு அநேக வாலிபர்கள் இந்த நாட்களில் அடிமைகளாகி உள்ளனர். இவர்கள் இந்த அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.



நமது தமிழகத்தில் விபத்துகளினால் மரிப்பவர்களை காட்டிலும் தற்கொலையினால் மரிப்பவர்கள் அதிகம் என்று செய்திகள் சொல்கின்றன. இப்படிப்பட்ட தற்கொலையின் கிரியைகள் முற்றிலுமாய் நிர்மூலமாக்கப்படும்படியாய் ஜெபிப்போம்.

## 4ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

இன்றைக்கு வாலிபர்களுக்குள்ளாக காணப்படுகிற ஜாதி உணர்வுகள் நீங்கவும், கிறிஸ்துவின் அன்பை உணர்ந்துக் கொள்ளவும் ஜெபிப்போம்.

கள்ள ஊழியர்கள், கள்ள தீர்க்கதரிசிகளின் வார்த்தையினால் ஜனங்கள் வஞ்சிக்கப்படாதபடி, அவர்களை இனம் கண்டுகொள்ளக்கூடிய ஆவிக்குரிய தெளிவு விசுவாசிகளுக்கு உண்டாக ஜெபிப்போம்.



மூட பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள நம் ஜனங்களின் கண்கள் திறக்கப்பட, அடிமைத்தனங்களில் இருந்து வெளிவர ஜெபிப்போம்.

பண ஆசையினால் தவறான பாதைகளை தேர்வு செய்யும் வாலிபர்கள் சரியான பாதைக்கு திருப்பப்பட ஜெபிப்போம்.

# TRUE SOLDIER



தாயின் வயிற்றில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, அவரால் அழைக்கப்பட்டு, அபிஷேகிக்கப்பட்ட ஒவ்வொரு யுத்த வீரர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

சாத்தானின் ராஜ்யத்தை துரத்தி அழித்து, ஜனங்களை விடுவித்து தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கும் ஒவ்வொரு சேனை வீரனுக்கும் பயிற்சி அவசியம். இந்த பகுதியிலும் சேனையதிபதியாம் இயேசு கிறிஸ்து நமக்கு கற்று கொடுக்க போகும் ஆயத்தம் "ஒவ்வொரு போர்சேவகனும், நான் கிறிஸ்துவின் போர்சேவகன் என்ற அடையாளத்தை தரித்து கொண்டவனாக இருக்க வேண்டும். "Every soldier should bear the mark of being a soldier of christ" ஒரு யுத்த வீரனுக்கு முதலாவது அவன் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய முக்கியமான ஒன்று, அவன் அணிந்துள்ள சீருடை. அந்த சீருடை அவன் எந்த கிளையை சார்ந்தவன் என்பதை தெரியப்படுத்தும். அவன் எந்த தரத்தின் அடிப்படையில் பணிபுரிகிறான் என்பதை சுட்டிகாட்டுவதும் சீருடை என்ற அடையாளமே....ஆனால் ஒரு கிறிஸ்தவ போர்சேவகனின் அடையாளம் என்பது அவன் தரித்துள்ள பிதாவின் சர்வாயுத வர்க்கத்தின் மூலமாய் வெளிப்படுகிறது. இரண்டாவது அவன் கிறிஸ்துவையும் அவர் சுபாவத்தை தரித்து கொள்ளுதலில் வெளிப்படுகிறது. பரிசுத்தத்திலும், நீதியிலும், நிலைக்கும்படிக்கு புதிய மனிதனை தரித்து கொள்ளுதலும், அவரை வெளிப்படுத்தும் சுபாவங்கள் போன்றவையே நாம் கிறிஸ்துவின் போர்ச்சேவகர்கள் என்ற அடையாளத்தை காண்பிக்கும்படி செய்கிறது.

இன்றைய நாட்களிலும் நாம் கிறிஸ்துவின் போர் சேவர்கள் என்ற அடையாளத்தை அழிக்கின்ற பாவங்கள், இருளின் வல்லமைகள் உலகில் பெருகிவிட்டன. அதில் நின்று, தெரிந்துகொள்ளப்பட்டவன் என்ற அடையாளத்தை காத்துக்கொண்டு சாத்தானை கலங்கடிக்கிறவனே ஒரு மாபெரும் "யுத்த சேனை".


" சிம்சோனுக்கும் " நசரேயன் என்ற ஒரு அடையாளம் கர்த்தரால் கொடுக்கப்பட்டு இருந்தது. அவனும் தன் சொந்த ஜனங்களை பெலிஸ்தரிடமிருந்து மீட்டு இரட்சிக்கும் யுத்த வீரன் என்ற அடையாளத்தை பெற்றிருந்தான். அவன் தலை மயிரில் உள்ள அபிஷேகம் அவன் தரத்தை கண்டுகொள்ளவும் செய்தது. ஆனால், அவனோ சுபாவத்தில் தேவனை வெளிப்படுத்தவில்லை. தெலீலாள் என்ற வேசியோடு பாவத்தில் விழுகிறான். பெலிஸ்தர்களின் சூழ்ச்சி வலையில் சிக்குண்டு தான் தெரிந்துக்கொள்ளப்பட்டவன் என்ற அடையாளத்தை தொலைத்து விடுகிறான். கண்கள் பிடுங்கப்பட்டு, கால்களில் விலங்கிடப்பட்டு கேளிக்கைக்குறியவனாய் நிறுத்தப்படுகிறான். யோசேப்பு என்ற வாலிபனோ.... தான் தெரிந்து கொள்ளப்பட்டவன் என்ற அழைப்பை அடையாளத்தை கெடுக்க போத்திபார் மனைவி மூலமாக வந்த அந்த வேசித்தனத்திற்கு (பாவத்திற்கு) துணிந்து உதறிவிட்டு ஓடுகிறான்.

இன்றைக்கும் ஓடாமல் சில வாலிபர்கள் உலக சிற்றின்பங்களில் ஊறி திளைத்து கொண்டிருப்பதால் தாங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற அடையாளத்தை இழந்து நிற்கின்றனர். ஒருவர் ஒரே சமயத்தில் தேவனுடைய ராஜ்யத்தையும் சாத்தானுடைய ராஜ்யத்தையும் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது. யாருடன் சேருகிறோமோ அப்பொழுதிருந்தே சேராமல் இருக்கிறவர்களுக்கு எதிரியாகிவிடுகிறோம். இரண்டிலும் இல்லாமல் நடுநிலையாய் இருக்கிறோம் என்று நினைக்கிறவர்கள் தேவனுக்கு விரோதமாயும் சத்துருவின் பட்சமாயும் இருக்கிறவர்களாவர்.

இதை வாசிக்கிற தம்பி தங்கச்சி நீங்கள் யாரோடு கூட நிற்கின்றீர்கள். தான் தெரிந்து கொள்ளப்பட்டவன் என்ற அடையாளத்தை கெடுக்கிற அழிக்கிற எந்த ஒரு உறவோ, வார்த்தையோ, செயல்பாடுகளோ, உணர்ச்சியோ அவைகளுக்கு எதிர்த்து நிற்க தீர்மானித்திடுங்கள்.

*கர்த்தரால் அருளப்பட்ட அடையாளத்தை காத்து கொண்டு யுத்த சேனையாக சாத்தானின் ராஜ்யத்தில் சேதத்தை உண்டாக்கிடுங்கள்...*

**- Daisy Solomon**




## "How can they hear without someone preaching to them?"

*Romans 10:14*

**D**o you recall the salvation story of an Ethiopian which took place on the desert road that goes down from Jerusalem to Gaza? The man was reading the 53rd chapter of Isaiah, which was the prophecy of the messiah's crucifixion. God's Holy Spirit inspired Philip to spread the good news about Jesus (Acts 8:26-40).

The early church did not have anything in terms of technology, communication, facilities, media, and so on. Nonetheless, using God's power, they have spread the Gospel throughout the entire universe! Modern-day, technologically advanced churches with all the bells and whistles fail to take the Gospel to their own cities.What has caused this pattern to shift? What are we missing here? Let us dive deep into it to learn more about it. Accepting Jesus and being baptized was essentially the same as committing suicide in those days.Imagine how difficult it is to spread the Gospel in the midst of these persecutions! They had been slaughtered like animals simply for following Jesus. They had been slain mercilessly because they had worshipped Jesus.

What is lacking in these modern churches, despite having media and a large congregation? Why aren't we able to spread the Gospel nowadays? Most nominal Christians believe it is the responsibility of preachers or pastors to share the Gospel. Nominal Christians provide financial assistance to the church and help organise church-related activities, etc. The **"ZEAL"** is what is truly lacking. The zeal that drove them to become martyrs for Christ and accomplish so much for Christ. They've always had a mindset that proclaiming the Gospel is their **duty or mission**, as *1 Cor 9:16 ESV brilliantly expresses, "For if I preach the gospel, that gives me no ground for boasting. For necessity is laid upon me. Woe to me if I do not preach the gospel!"*

Many modern Christians are ashamed to share the Gospel because they are afraid of losing their friendship, being embarrassed for the sake of God, feeling bashful or timid, keeping their standing or prestige, and so on.Why did Paul and Peter preach without considering any of these issues? It was the "ZEAL," and it was overwhelming! It was so overflowing that they couldn't stop themselves from spreading the good news to the rest of the world. They were not concerned with what others thought of them, but rather with what God thought of them.

They were not ashamed of the Gospel of Christ! (Romans 1:16).Be glad and praise God if you go through tribulations for the sake of Christ! According to *I Peter 4:16, KJV, "Yet if any man suffer as a Christian, let him not be ashamed; but let him glorify God on this behalf.*

*"Trust me,If we suffer, we shall also reign with him: if we deny him, he also will deny us (2 Timothy 2:12).*

### Promising verse:

Romans 8:18 ESV: *"For I consider that the sufferings of this present time are not worth comparing with the glory that is to be revealed to us."*

### *Join with me in this small prayer:*

*Our Father in heaven, thank you for your grace and love. Please make us an instrument of carrying the good news of Jesus Christ. We have humbled ourselves to do your will. We pray in the name of Jesus. Amen.*

- Manoj Kumar

## உலக இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!...



# புளோரேஸ்கோ

நம்முடைய விசுவாசம் பெலப்படவும், இந்த கடைசி நாட்களில் கர்த்தருக்காக தங்கள் உயிரையும் துச்சமாய் எண்ணி, சாத்தானின் ராஜ்யத்தில் மிக பெரிய சேதத்தை ஏற்படுத்துவதற்காகவே, அவருக்காக சரித்திரங்களை படைத்த இரத்த சாட்சிகளைக் குறித்து ஒவ்வொரு மாதமும் பார்த்து வருகிறோம்.

1960 ஆம் ஆண்டு ரோமானியாவில் "இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தெய்வம்" என்று தைரியமாக அறிவித்த ஒரே காரணத்திற்காக கம்யூனிஸ்ட் தீவிரவாதிகளால் கொடூரமாக தாக்கப்பட்டு சிறையில் இரத்த காயங்களுடன் அடைக்கப்பட்டார் பாஸ்டர் புளோரெஸ்கோ.

ஒவ்வொரு நாளும் அவர்கள் சிறைக்கு வந்து உன்னோடு கூட அந்த இயேசுவை பின்பற்றுபவர்கள் எங்கே? அவர்கள் எங்குள்ளனர்? என்று கேட்டு துன்புறுத்துவார்கள். எதைக்கேட்டாலும் அமைதியாகவே இருந்து சாதித்தார் புளோரெஸ்கோ.

அந்த தீவிரவாதிகளுக்கு அது ஒரு சவாலாகவே மாறி விட்டது. பழுக்க காய்ச்சிய இரும்பு கம்பியுடன் வந்து மீண்டும் சொல்லுமாறு வற்புறித்தினர். அவரோ, அமைதி காத்தார். அந்த கம்பியின் உக்கிரமான தோற்றம் அவருக்கு அச்சத்தை உருவாக்கிற்று. இது என் நொந்து போன சரீரத்தில் பட்டால் என் நிலை என்னாகும்? என்ற எண்ணம் ஒரு பக்கம் எழ, மறு பக்கம் கர்த்தர் எதை செய்தாலும் அது எனக்கு நலமானது தான் என்று தன் விசுவாசத்தில் அதிகமாய் பெலப்பட ஆரம்பித்தார்.

உடனே பழுக்க காய்ச்சிய கம்பி அவர் சரீரத்தில் அநேக இடங்களில் காயத்தை ஏற்படுத்த அவர் மயங்கி விழுந்தார் பல நாட்கள் பட்டினி போடப்பட்ட எலிகளை அவர் அறையில் விட்டு அவரை தூங்க விடாமல் தடுத்தனர். இன்னும் சொல்லமுடியாத அநேக சித்திரவதைகள்... அதின் மத்தியிலும் மற்றவர்களை காட்டிக் கொடுக்காமல் கிறிஸ்துவின் மேல் அதிக விசுவாசத்தோடு இருந்தார்.

கடைசியாக அவரின் 14 வயது மகனை புளோரெஸ்கோ முன்பு கொண்டு வந்து நிறுத்தி அவனை அடித்து சித்திரவதை செய்தனர். அவரால் தாங்க முடியாமல் கதறி அழுதார். அவரின் உறுதியான நம்பிக்கை அசைய ஆரம்பித்தது. என் மகனே! உன் மேல் விழும் அடிகளை என்னால் பார்க்க முடியவில்லை.... அவர்கள் எதிர்ப்பார்க்கிற தகவல்களை சொல்லித்தான் ஆக வேண்டுமோ? என்னால் சகிக்க முடியவில்லையே.... என்று கதறி துடித்தார்.

### உடனே ஒரு சத்தம்!


**"அப்பா! என்னைக் கொன்றாலும் அதை தாங்கிக் கொள்ளுங்கள். கிறிஸ்தவர்களைக் காட்டிக் கொடுத்த துரோகியின் மகன் என்ற பெயர் எனக்கு வேண்டாம் பா! நான் மரித்தால் இயேசப்பா கிட்ட சீக்கிரமாக போய்டுவேன். நீங்களும் நானும் அங்கு சந்தோஷமாக இருக்கலாம். நீங்கள் பயப்பட வேண்டாம்"** என்று தன் தகப்பனுக்கு ஆறுதல் சொன்ன வார்த்தைகளை கேட்டு தந்தையின் உள்ளம் உடைந்தது.எதையோ எதிர்ப்பார்த்து மகனைக் கொண்டு வர அது வேறு வகையில் திரும்பி விட்டதே என்ற கோபத்தில் அந்த சிறுவனை கொன்றனர். இயேசுவை துதித்து கொண்டே தன் ஜீவனை விட்டான் புளோரெஸ்கோவின் 14 வயது மகன். பின்பு புளோரெஸ்கோவையும் கொலை செய்தனர்.

**இதை வாசிக்கிற சேனை வீரர்களே! இந்த சிறுவனிடம் உள்ள தைரியம், இயேசுவின் மேல் உள்ள அசையாத அன்பு நமக்குள் இருக்கிறதா?**

**அவர் நமக்காக ஜீவனையே கொடுத்து, இன்றும் நம்மோடு ஜீவிக்கிறாரே... ஒவ்வொரு நாளும் நாம் அவரோடு ஜீவிக்கிறோமா?**

**- Priya**







## அன்பு தம்பி தங்கச்சி!

***எல்லாரும் சந்தோஷமா இருக்கீங்களா?*** உங்களுக்கு Social Subject ரொம்ப பிடிக்கும் அப்படித்தானே? ஒரு நாள் VIII B Class Room –ல் Social Mam Nancy, Planets, Earth, Sun, Moon பற்றி Class எடுத்துட்டு இருந்தாங்க. Class ரொம்ப Interest–ஆ இருந்திச்சு.... அப்போ Social Mam Nancy சொன்னாங்க, **"The Moon is the only natural satellite of the earth"** and it is the only satellite which reflects light from the sun. கேட்கவே ரொம்ப அழகா இருக்கு அப்படித்தானே? இப்படி தான் தம்பி தங்கச்சி, இயேசுகிறிஸ்து உலகத்துக்கு வெளிச்சமாக இருக்காங்க. உங்க மூலமாகவும் என் மூலமாகவும் தம்முடைய வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ண விரும்புகிறார். தம்பி, தங்கச்சி, Moon எப்படி Sun கிட்ட இருந்து light receive பண்ணுறது? **"The sun's powerful rays travel through the space, hit the moon and are reflected back"** இதே மாதிரிதான் Sun rays போல இயேசப்பா, தம்முடைய வார்த்தை **(Holy Bible)** மூலமாக நம்மிடம் "கிட்டிச் சேர்கிறார்"... எதுக்கு தெரியுமா தம்பி தங்கச்சி? இந்த உலகத்துல கோடி ஜனங்கள், சில நல்ல மனிதர்கள், பரிசுத்தவான்கள் இருந்தும் **"He Finds you in his own image, and declares that you are his trustworthy possession to reflect his magestic glory (light) to this dark world". Yes!** தம்பி, தங்கச்சி, நம்ம மூலமாக தான் இயேசப்பா இந்த உலகத்தை வெளிச்சமாக மாற்றப் போகிறார். நீ ஒன்று செய்யத் தீர்மானிப்பாயா? அவரை **"கிட்டி சேர்"** **He'll transmit his light rays into you and you will be his witness in this dark world.** - Amen

**- Blessy**



## Abide in Him who Loves...

Toddlers play, run and laugh
Eat and drink, Giggle and crawl
Placing an eye always focused on dad
With no fear, filled with love and hope
Doesn't look on situations indeed
Climbs on dad's lap and clings onto his chest
Pulling dad's beard and mustache
Then sits on his rock shoulder feeling proud.

A Good father corrects his child now and then
Sometimes with words and mostly with stick
Inspite of all scoldings and battering
Minutes later the child comes and says,
holding onto dad's leg with tears filled eyes
**" Pappa lift me"**

***Abide in him (Jesus) like a toddler***

**- Jenefar**





# எழுப்புதல் நட்சத்திரம்

## அமெரிக்காவின் எழுப்புதல் வரலாற்றுப் பதிவேடுகளில் பதிக்கப்பட்ட சம்பவம்

ஒரு கல்லூரியில் ஏற்பட்ட எழுப்புதல் "கென்டக்கி" (Kentucky) என்ற மாகாணத்தில் உள்ள வில்மோர் (Will more) என்ற பட்டணத்தை பெரிய அளவில் அசைத்தது. அது தேசம் தழுவிய மாபெரும் எழுப்புதலானது.

1970 பிப்ரவரி மூன்றாம் தேதி, செவ்வாய் கிழமை, கென்டக்கியின் வில்மோரில் உள்ள அஸ்பரி (Asbury) கலை கல்லூரி வளாகத்தில் காலை 10 மணி அளவில் தேவாலயத்தில் எல்லோரும் ஆலய ஆராதனைக்கு கூடி வருகின்றனர். அவர்களுக்குள் சாதாரண உரையாடலே இருந்தன. அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர விரைந்தனர். அன்று காலை நிகழ்ச்சியில் அதன் வழக்கமான பிரார்த்தனை முறையை கைக்கொள்ளவில்லை. திட்டமிடப்பட்ட பேச்சாளராக இருந்த அந்த கல்லூரியின் டீன் பிரசங்கம் செய்யவில்லை. மாறாக, கர்த்தர் தனக்கு வாழ்வில் செய்த அற்புதங்களை பகிர்ந்து கொள்ள ஆரம்பிக்கிறார். அங்கு இருக்கும் ஒவ்வொரு பேராசிரியர்களையும், வாலிபர்களையும் அவ்வாறு பகிரும்படி ஊக்குவிக்கிறார். எல்லாருமே பகிருகின்றனர். இன்னும் ஆராதனை முடிவடைய 5 நிமிடங்களே உள்ள நிலையில் Philosophy துறையை சார்ந்த ஆசிரியர் முன்பதாக முன் வரிசையில் வந்து இங்கு இயேசு வந்திருக்கிறார் என்று கூறுகிறார். இயேசு கிறிஸ்து அங்கே வந்தார். அங்கு ஒரு ஜெப ஆவி ஊற்றப்படுகிறது. வந்திறங்கிய உன்னத ஆவியானவர் பலரை பாவ அறிக்கை செய்து உடைக்கிறார். முன்பதாக எழும்பி அநேகர் பாவ அறிக்கையிடுகின்றனர். இவ்வாறு இந்த ஜெபமானது தொடர்ந்து 8 நாட்கள் சென்றது. துதி ஆராதனை, சாட்சி பகிர்வு, ஜெபம் என்று தொடர்ச்சியாக கர்த்தர் பலரை உடைத்து உருவாக்கினார். அங்கு இருக்கும் கடைசி நபர் மனந்திரும்பி உடைக்கப்படும் வரை அந்த ஆராதனை முடிவடையவில்லை. அவர்களால் நிறுத்த முடியவில்லை. எதற்காக இந்த அபிஷேகம், அந்த தேசத்தை அசைக்க கர்த்தர் அங்கு இருக்கும் மாணவர்களை கரங்களில் எடுத்தார். அவர்கள் சென்று அங்கு சுற்றி உள்ள பள்ளிகள், கல்லூரிகள், அநேக Seminary schools -க்கு கடந்து சென்று சுவிசேஷம் சொல்லி அநேகரை கர்த்தரண்டை நடத்துகிறார்கள்.

இது அப்படியே தேசம் எங்கும் வெடித்து கிளம்பும் மாபெரும் எழுப்புதலானது. இந்த 2023 பிப்ரவரி 8ம் தேதியில் மறுபடியும் கென்டக்கியின் வில்மோரில் (Asbury) கலை கல்லூரியின் ஆலயத்தில் வைத்து ஆலய ஆராதனை தொடங்கி, இடைவிடாமல் நடந்து கொண்டிருக்கிறது. யாராலும் தடுத்து நிறுத்த முடியாத எழுப்புதல் அமெரிக்காவிலும் ஆவியானவரால் பொழிந்தருளபட்டுருக்கிறது. இந்தியாவின் பள்ளியில், கல்லூரியில், திருச்சபையிலும் ஆவியானவரால் எழுப்புதல் அக்கினி போடப்பட ஆயத்தமாக இருக்கிறது. இதை வாசிக்கிற ஒவ்வொருவரை கொண்டும் அவர்கள் இருக்கிற இடத்திலே பெரிய எழுப்புதலை கொடுக்க தேவன் சித்தமுள்ளவராய் இருக்கிறார்.

**நீயும் உன் கல்லூரியில்,**
**பள்ளியில் எழுப்புதல் நட்சத்திரமாக மாறுவதற்கு**
**இன்றே உடைத்து ஊற்றிவிடு!**
**உன்னை கர்த்தர் சமூகத்தில்...**

- Daisy Solomon











## சிலுவை நாதர் இயேசுவின் சீர்மிகு நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த மாதத்தில் அநேக புதிய எல்லைகளில் கர்த்தர் வாசல்களை திறந்து, அங்குள்ள வாலிபர்களை கர்த்தரண்டை நடத்திட கிருபை பாராட்டினார். கடந்த ஜனவரி மாதம் 29-ஆம் தேதி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூர் பகுதியில் உள்ள பள்ளி மாணவிகளுக்கான சிவிஷி விடுதியில் உள்ள இளம் வாலிபர்கள் மத்தியில் ஊழியத்தை நிறைவேற்ற கிருபை பாராட்டினார். 150க்கும் அதிகமான விடுதி மாணவிகள் பங்குபெற்றனர். அநேகருடைய வாழ்க்கையில் ஆவியானவர் தனிப்பட்ட விதத்தில் இடைபட்டு தம்மை வெளிப்படுத்தினதை நன்கு உணர முடிந்தது. அநேகர் தங்கள் வாழ்வை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து புதிய தீர்மானங்களோடு கடந்து சென்றனர். அவர்கள் இன்னும் கிறிஸ்துவுக்குள் வரளவும் சேனைகளாய் எழும்பவும் தொடந்து உங்கள் தனி, குடும்ப மற்றும் குழு ஜெபங்களில் தாங்குவோம்.

பிப்ரவரி மாதம் 27ஆம் தேதி பாளையங்கோட்டை பகுதியில் தேர்வு எழுத ஆயத்தப்படுகிற வாலிபர்களுக்கான விசேஷித்த கூடுகையை நடத்த அழைத்தவர் கிருபை பாராட்டினார். 50-க்கும் மேற்பட்ட வாலிபர்கள் பங்கு பெற்று கர்த்தருக்குள் திடப்பட்டனர். இவர்கள் தேர்வுகளில் மாத்திரம் அல்ல, இந்த உலகத்தில் ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ தொடர்ந்து நாம் ஜெபிப்போம்.


















# Testimonies...

இயேசப்பாவ அறியாத குடும்பத்தில் இருந்து தான் வந்தேன். என் குடும்பத்தில யாருமே இரட்சிக்கப்படல, பாவம்-னு தெரிஞ்சும் நிறைய தவறு செய்தேன். ஆனா, இன்னைக்கு தான் உண்மையா இயேசப்பாவ ஏற்றுக்கொண்டேன். என் கூட பேசுங்க இயேசப்பா-னு சொல்லி அழுது ஜெபித்தேன். இயேசப்பா என் கூட பேசிட்டாங்க ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு. இனியும் அவருக்காக சாட்சியாக இருப்பேன்.

- Keerthika Angel

நான் ஜெபிக்கும் போதெல்லாம் நான் செய்த தவறுகள் எல்லாம் என் கண் முன்பாக வந்து நின்றது. என்னால் ஜெபிக்க முடியவில்லை. ஆனால், இன்று இயேசப்பா என்னிடம் பேசிய பின் முழு பாவங்களும் என்னை விட்டு அகன்றதை உணர்ந்தேன். இனி அவருக்குள்ளாக பரிசுத்தமாக இருக்க ஜெபித்து கொள்ளுங்கள்.

- Thabithaal

நான் ஜெபிக்கும் போது இயேசப்பாவோட தெளிவான குரலில் பயப்படாதே மகளே! நான் உன்னோட இருக்கிறேன் என்று சொன்னதை கேட்டேன். அபிஷேகத்தை பெற்றுக் கொண்டேன். இயேசப்பாவுக்கு நன்றி.


- Rishiya

நான் 9ம் வகுப்பு படிக்கும் போது இயேசப்பாவை ஏற்றுக்கொண்டேன். அடிக்கடி என்கிட்ட யாரோ நீ செத்துவிடு என்று சொல்லிக்கொண்டே இருப்பது போல கேட்கும். தற்கொலை எண்ணங்கள் வரும். நான் அழுது ஜெபித்த போது என்னை விட்டு ஒரு இருள் அகன்றது போல உணர்ந்தேன். இப்போ சந்தோஷமா இருக்கேன். இனி என்னை போல உள்ள வாலிபர்களை இயேசப்பாக்காக ஆயத்தப்படுத்துவேன்.

- Maha shakthi

என்னிடம் அநேக பாவங்கள் உண்டு. என்னால் முழு மனதோடு ஜெபிக்கவே முடியாது. ஆனால், இன்று இயேசப்பா என்னை அக்கினியால் அபிஷேகம் செய்தார். எல்லா பாவங்களில் இருந்தும் விடுவித்தார். இயேசப்பாக்கு நன்றி.


- Angelin



# BIBLE IN SCIENCE

ஒரு cell உடைய outer layer தான் Cell membrane. இது lipids மற்றும் proteins ஆல் உருவானது. Cell membrane-ல இருக்கும் proteins, transport proteins/ Carrier proteins-ஆ செயல்படும். எப்போனா Cell-க்கு வெளியே இருக்கிற substances lipid bilayer வழியா diffuse ஆகி உள்ளே வரமுடியாத போது, அந்த substances இந்த carrier protein வழியா cell-க்கு உள்ள வரும்.

இதே போல தான் நம்ம வாழ்க்கையிலும் நிறைய நேரம் ஆண்டவரோடு கிட்டி சேர முடியாம பாவ வாழ்க்கையில் தவிக்கிறோம். இந்த Carrier proteins மாதிரி பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு முயற்சி செஞ்சோம்னா பாவ வாழ்க்கையை ஜெயிச்சு கர்த்தரண்டை கிட்டி சேர முடியும்.




- Thrusha




**Meeting ID: 766 799 5892**

**Passcode: 1CRORE**

புதிய நாளில் புதிய கிருபைகளை பெற்றிட, புதிய நாளைத் தந்த கர்த்தரின் பாதத்தில் அந்நாளை துவங்கிட, நித்தியத்தில் நம்மை நிலை நிறுத்தும் நித்திய வார்த்தைகளை கேட்டிட அதிகாலையில் எங்களோடு இணைந்து கொள்ளுங்கள்...

இயேசுவை அறிந்தவர்களாய், தொழுதுகொள்கிறவர்களாய் மாத்திரம் அல்ல, அவருக்காய் வாழ்ந்திட அவரைப்போல வாழ்ந்திட, இயேசுவைப்போல நாமும் உருவாக்கப்பட மாலையில் எங்களோடு இணைந்து கொள்ளுங்கள்...





Reg.No. 4/46/2019

Regd.Office :428,7th Middle Street, Thiagarajanagar, Tirunelveli - 627011

Phone: +91 766 799 5892, +91 900 322 4541 Email : info@endtimewarriors.org Web: www.endtimewarriors.in


Follow us on: